அதிக அளவிலே நிதியை ஒதுக்கி சிறப்பாக ஆட்சி நடத்துகிற இந்த ஆட்சிக் காலத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆய்வுக்கூட அறையை கட்டித்தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே ஆய்வுக் கூடங்கள் இருந்தால் தான் அங்கே சிறப்பாக கல்வி தர முடியும் என்று கருதி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் கேட்டிருந்த தொகையை விட இரண்டு மடங்காக தரவேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அப்படி நிதி தரப்படுகிறபொழுது அரசின் இந்தப் பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முற்பகல் 10-55

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பல்வேறு தனியார்களுடைய சலுகைகளோடு சுற்றுச் சுவர் கூட கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வரும் நிதி ஆண்டில் இதை உறுதியாக செய்து தர அமைச்சர் இறுதியான நடவடிக்கையை அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் இந்தப் பள்ளியைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 296, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

296—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த ஊனமுற்றோர் விவரம்

33233*—திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள்?

1995 ஏப்ரல் 10]

(ஆ) அவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை ஏதேனும் அளிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 31-12-94 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மொத்தம் 46,367 உடல் ஊனமுற்றோர் பதிவு செய்துள்ளார்கள்.

(ஆ) ஆம்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய இந்த பொற்கால ஆட்சியில், விதவைகள், ஊனம் உற்றவர்கள், இப்படிப்பட்ட நலிந்த பிரிவினர்களுக்குச் சலுகைகள், முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களை உடன் பிறந்தோர் கைவிட்டாலும்கூட, புரட்சித் தலைவி கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி 46,000 பேர் பதிவு செய்தவர்களில் எத்தனை பேருக்கு, எந்த ஆண்டு பதிவு செய்தவர்கள் வரைக்கும் இப்போது வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பார்வை இழந்தவர்கள் 35 நபர்கள், 41 காது கேளாதவர்கள், 777 பிற உறுப்புகள் ஊனம் உற்றவர்கள் ஆக மொத்தம் 853 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதியப் பெற்றவர்களுக்கும், இப்போது வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றவர்களுக்கும் வித்தியாச சதவிகிதம் குறைவாக இருக்கிற காரணத்தால் இந்த முன்னுரிமை சதவிகிதத்தை அதிகப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா, தற்போது தனியார் நிறுவனங்கள் எல்லாம், அரசு கூட்டு நிறுவனங்கள் எல்லாம், இவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அதை நிறைவேற்றுவதன் மூலமாக இந்த 46,000 பேர்களுக்கும் உடனடியாக வேலை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. க. அர்ச்சுனன் அவர்களுடைய கேள்விக்கு மறுபரிசீலனை செய்யப்படும். இருந்தாலும், 50 பேருக்கு எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்ச் இல்லாமலேயே வேலை அளிக்கப்பட்டிருக்கின்றது. பதிவு இல்லாமலேயே சத்துணவிலே வேலை அளிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 297, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

297—

சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

22418*—திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர் மற்றும் வெட்டிக்காடு ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விக்கிரவாண்டி ஒன்றியம், கயத்தூர் மற்றும் வெட்டிக்காடு ஆகிய கிராமங்களை இணைக்கும் வகையில் பாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசு வேலையை திட்டப்பணி மூலம் செயல்படுத்துவதற்கு பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்கின்ற பைபிளினுடைய வாசகத்திற்கு ஏற்ப, பொற்கால ஆட்சி நடத்திவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் கேட்கும்பொழுது எல்லாம் பரிசீலிக்கப்படும் என்று நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்